[திரு. டி. ஜெயக்குமார்] [2019 பிப்ரவரி 14

ஏற்கெனவே, நமது கடற்கரையோரக் கிராமங்களில் இதுபோன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. முகத்துவாரத்தை ஆழப்படுத்த வேண்டும்; சிறு மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்பட வேண்டும்; கடலரிப்பைத் தடுக்க வேண்டும். இதுபோன்று பல்வேறு காரணங்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக ரூ.1,120 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.2,389 கோடியும், ஆக மொத்தம், ரூ.3,509 கோடி Green Climate Fund என்று சொல்லக்கூடிய பசுமை பருவகால நிதியைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசு sanction approval and administrative approval கொடுத்து, அதனடிப்படையில் இத்திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து அழுத்தம் கொடுத்து அதையும் பெறவிருக்கின்றோம். மொத்தம் ரூ.4,000 கோடி இருந்ததென்றால், ஒரே வருடத்தில் மீனவர்கள் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரலாம். ஆனால், நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எவற்றிற்கெல்லாம் top priority தேவைப்படுகின்றனவோ, அவையெல்லாம் phased manner-ல் நிச்சயமாக செய்து கொடுக்கப்படும். பழவேற்காடு ஏரிப் பணிகள் உறுதியாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(உ) திண்டுக்கல் மாவட்டம், தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். பொறுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள், மக்காச்சோளம், பருத்தி, வெங்காயம், சோளம் போன்ற பயிர்களுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்தி, மக்காச்சோளத்திற்கு சுமார் 5,966 பேரும், பருத்திக்கு 1,554 பேரும், வெங்காயத்திற்கு 18 பேரும், சோளத்திற்கு 2,439 பேரும் என மொத்தம் 9,977 பேர் ரூ.73,36,531/- premium செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மும்பையில் இருக்கின்ற Agriculture Insurance Company Private Limited என்ற நிறுவனத்திற்கு அந்தப் பணத்தை செலுத்தியிருக்கிறார்கள். 2016-2017 ஆம் ஆண்டு வறட்சியின்போது வரவேண்டிய

2019 பிப்ரவரி 14] [*திரு. அர. சக்கரபாணி*]

காப்பீட்டுத் தொகையான 28 கோடியே 33 இலட்சத்து 94 ஆயிரத்து 825 ரூபாய் இன்னும் வராமல் இருக்கின்றது. இதனால் அந்த விவசாயிகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் premium *செலுத்தியிருக்கின்ற விவசாயிகளுக்கு அந்த இழப்பீட்டுத் தொகையை உடனடியாகப் பெற்றுத் தருவதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(ஊ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே பள்ளிக்கூட்டத்தில் தடுப்பணைக் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதியில், தாமிரபரணி ஆற்றின் ஒரு பகுதியாக இருக்கும் முல்லையாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவதற்கு பல ஆண்டுகளாகக் கோரிக்கைகளை வைத்து வருகிறோம். முல்லையாற்றில் குறிப்பாக, பள்ளிக்கூட்டம் என்ற இடத்தில் அந்தத் தடுப்பணை அமையப்பெற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இப்பகுதியைச் சார்ந்த அமைப்பினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அதற்குண்டான நடவடிக்கையை எடுத்தால், நெய்யாற்றிலிருந்து வர வேண்டிய தண்ணீர் கேரள மாநிலத்திடமிருந்து கிடைக்கப் பெறாத சூழ்நிலையில், அதற்கான வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலையில், குடிநீர் மற்றும் தண்ணீருக்கு பிரச்சினை இருக்கிறது.*

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் விளக்கமாக எல்லாம் பேச முடியாது. நான் சொல்லிவிட்டேன். நீங்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பில் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.* (குறுக்கீடு) *இல்லை எனக்கு* time *இல்லை. 12 மணிக்கு வேறு அலுவலை எடுத்துக்கொள்ள வேண்டும்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணை அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*